ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

மாதம் ஒருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

பத்திரிகாக்ரயம். [illegible]

[illegible]

உ-ம் புத்தகம். } சிதம்பரம்:—சர்வஜித்துஹு ஐப்பசிமீ கசு-உக்கு. கஅஅஎஹு அக்டோபர்மீ ௩௧-உ திங்கட்கிழமை. { இலக்கம்-ரு.

[illegible]

[illegible]

—:(*):—

[illegible]

ஓர் உபநியாசம்.

[முன் தொடர்பு.]

கிறிஸ்துமதம் விருத்தியடையவேண்டுமென்று விரும்பிய ஓர் ஐரோப்பியபாதிரி "ஜாதிகளினின்றும், அவரவர் குலத்திற்கேற்ற ஆசாரங்களினின்றும் வெளிவந்தவர்களுக்குப் புதிதாய் அவர் கொண்ட மதத்தவர் கூட்டங்களில் சேர்க்கையில்லாமையே, இக்காலத்தில், கிறிஸ்துமதம் விசேஷமாய் இத்தேசத்திலே பரவுவதற்குப் பெருந் தடையாகவிருக்கின்றது. அவர்களுள் உயர்ந்தோர்க்கு ஓர்விதம் சமுதாயம் ஏற்படுத்தி, அவர்களை அதிற் சேர்த்து, அவர்களுக்குத் தக்கபடி உபபலங்களும் பலவித சகாயங்களும் செய்யவேண்டும். அவருள்ளும் நல்ல புத்திமான்களாயுள்ளவர்களுக்கு மற்றவரிலும் அதிகமான ஆதரவும், பெருமையும், தக்க அதிகாரங்களும் அரசினரால் அவசியகம் கொடுக்கப்படவேண்டும். இவ்விதம் அவர்களுக்குத் தக்க கௌரவம் கொடுத்து நம்மிடம் விசுவாசம் பெருகச்செய்தால், அநேகர், உயர்குலத்தோராயினும் நான் முன், நான் முன் என்று ஒவ்வொருவரும் தடையின்றிக் கிறிஸ்துமதாநுசாரியர்களாவர்கள்" என்று சொல்லுகிறார். உலகத்தில் எல்லா இராச்சியாதிகாரத்தையும் ஒருவனுக்குக் கொடுப்பதாய்ச் சொல்லி ஆசைகாட்டினும், அவன் புத்தியுள்ளவனுமின், ஒருபொழுதும் தம்மதத்தைவிட்டுப் பிறமதத்திற்கிரையாகி, தமதாஸ்திகத்தையிழந்து மகாபாவியாய்ப்போகத் துணிந்திடான். நடுத்தெருவில் நின்று சந்தையிரைச்சல்போட்டு, கிறிஸ்துமதத்தாலன்றி வேறுவழியால் முத்தி சித்தியாதென்று சொல்லிக் கூச்சலிடுவதாற் பயனென்னை? உலகத்திலே ஓர்வகையானும் ஜீவனஞ்செய்து வயிற்றைவளர்த்தற்கு வழியற்றவனும், இழிந்தஜாதியிற் பிறந்தவனும், சுயமதப்பயிற்சி சிறிதேனுமில்லாதவனும், பிறர்வார்த்தையை ஏதுவின்றிக் குருட்டுத்தனமாய் நம்புகிறவனுமான எவனேனும் ஒருவன், அவரிடம் ஞானஸ்நானம்பெற்று அவர் மதத்தவன் என்றுசொல்லி வெளிவருகின்றானேயன்றி, வேறில்லை. ஆயினும், கிறிஸ்துமதச் சித்தாந்தத்தையேனும், மகமதியமத சித்தாந்தத்தையேனும், மற்றெவர் சித்தாந்

[illegible]

தத்தையேனும் படிப்பதிலும், அவற்றினுண்மையையறிவதினும் மட்டில், சிறிதேனும் குற்றமில்லை. இப்பொழுதும் இர்து தேசத்தவராய நம்மவர் மதத்தின் உண்மையை அறிதற்பொருட்டு, சில மேற்றிசைப்பண்டிதர்கள், நமது வேதசாஸ்திரங்களில் படும் பரிசுரமத்தை நாம் அறிர்திலமா? அவர்களுள் ஒருவரேனும் தம்மதத்தை விட்டு நம்மதத்தில் வந்திலரோயென்று, அதையே திருட்டாந்தமாகக்கொண்டு, நம்மதத்தை நாம் ஒருபொழுதும் விடக்கூடாது. இதரமதங்களுக்கும் நம்மதத்திற்குமுள்ள வேற்றுமைகளென்னையெனில், நம்மதத்தில் வருணுசிரமதருமங்களுண்டு; மற்றையவற்றில் அஃதில்லை. ஆதலினுற்றான் கிறிஸ்துமதப் பாதிரிகள், அவ்வருணுசிரமங்களை ஒழித்தால் தடையின்றித் தம்மதம் விருத்தியடையுமென்று எண்ணமுற்று, அடிக்கடி முயன்றுவருகிறார்கள். உண்மையில் இப்பொழுதுள்ள ஜாதியாசாரங்களை ஒழிக்கில், அதனுல் பல சங்கடங்கள் நேருமேயன்றி, வேறு நன்மையொன்றுமில்லை. ஜாதி ஜாதியென்று பெயர் எத்தேசங்களிலும் வழங்கிவருகின்றனவாயினும், அப்பதப்பொருள்மாத்திரம் தேசந்தோறும் வேறுபட்டேயிருக்கின்றது. நம் தேசத்தில் எங்ஙனம் பிராமணன் பிராமணகுலத்திற் பிறத்தன்மாத்திரையால் மற்றவரிலும் சிறந்தோனெனப்படுகின்ருனே, அங்ஙனம்,மேற்றிசையாருள் வெவ்வேறு காரணங்களால் ஒவ்வொருவன் உயர்வடைவான். எல்லோரும் கடவுளிடத்தில் ஒரேகணக்கில் எண்ணப்படுவோர்கள். ஆகையால், எல்லாஜனங்களும் அவ்விதத்நோக்கில் ஒரே ஜாதிகளே. அதுகொண்டு உலகநடவடிக்கைகளில் ஜாதிகளைவிட்டு ஒரேஜாதியாயிருக்கவேண்டுமென்பது சிறிதுங் கூடாவாம். உலகத்திலே ஒற்றுமை எல்லாவித சுகங்களையும் தருமேனும், ஆதிகாலந்தொடங்கிச் சுபாவமாய் ஏற்பட்டு நடந்துவருகிற தர்மமான ஜாதியை அவசியமில்லையெனச் சொல்லுதல் பொருந்தாது. எக்காலத்தில் பிராமணுதி ஜாதிகள் நன்ருய் மற்றவரறியும்படி வெளிவந்ததோ அக்காலத்தில் அந்த ஜாதிகளிலிருந்த ஏற்பாடுகள் இப்பொழுதிருக்கின்றனவா? இன்னும் சிறிதுகாலம் செல்ல இப்பொழுதுள்ள ஜாதிநியமங்களும் குறைவடையும். இவ்விஷயத்தில் கிறிஸ்துமதபோதகர்களைக் குற்றம் சொல்லவேணடுவதில்லை. இது உலகசுபாவம். ஏதோ ஒரு விஷயத்தில் ஓர்வித உயர்விருந்தால் அதையடைய மற்றவர் விரும்புவதியல்பேயாயினும், எமக்கு இத்தேசத்தில் இக்காலத்தில் கிடைத்திருக்கும் ஜாதிப்பெருமையை மற்றவர் ஒருக்கால் பெற்ருலும் பெறுவர். இவ்விதம் தானே "பெருகியது குறையும்" என்பதை அனுசரித்து, குறைந்துவரும் ஜாதியாசாரநியமங்களைக்கெடுக்க முயலும கிறிஸ்துமதபோதகர் பெருமுயற்சி, ஆட்டங்கண்ட பல்லை அசைத்துப்பிடுங்குவதுபோல அதிக வருத்தத்தைக் கொடுப்பதுந்தவிர, பயனற்றதுமாகும். "பணமே கலியில் ஜனங்களுக்கு ஜாதியாசார குணங்கள்; தர்மம், நியாயம் இவைகளை நிலைநிறுத்துவதிலும் காரணமாகும்." என்று பாகவதத்திலே சொல்லியபடி படிப்படியாய்க் கலிகாலதர்மங்கள் இப்பூமியில் அடிவைக்கக் காண்கின்ருேம். ஆயினும், நெடுங்காலமாய் நிலைபெற்றுவந்த இந்த ஜாதிநியமங்கள் ஒருகாலத்திலும் முற்றிலும அடியோடழியாது. இது வேதங்களிலேயுள்ளதாதலால் இதை நாம் அனுஷ்டிக்கவேணடும் என்கின்ற ஆஸ்திகபுத்தியுடன் இதை அனுஷ்டித்துவராமற் போனபோதி

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஆம், இது குணமுள்ள ஒரு பொதுக்கட்டுப்பாடென்றுவதுகொண்டு அனுஷ்டிக்கப்பட்டேவரும். சில சீர்திருத்தங்களையும் பெறும். தமக்குரிய தர்மத்துடன் சத்தியம் முதலிய நற்குணங்களும் பொருந்திய ஒவ்வொருவனும் மதிக்கப்படத் தக்கவனே. அவன் ஜாதியில் தாழ்ந்தவனாயினும் அவனை இகழ்ச்சிசெய்தல் நன்றன்று. அதுபற்றியே "ஜாதியில் நீசனாயிருந்தாலும் ஸ்ரீபகவானுடைய சரணாரவிந்தங்களில் மனத்தைப் பதித்துநின்றவன் உலகத்தில் பெரியவனே. அங்ஙனஞ் செய்யாதவன் பிராமணனாயினும் அவன் உயர்ந்தவனாகான்." என்று ஆன்றோர் அருளினர். சிலர், மதியீனத்தால் தமது மதாசாரங்களைத் துறந்து பரமதப்படுகுழியில் விழுந்தாலும், நெடுங்காலமாய் நமது தேசத்தில் நிலைபெற்றுவந்ததும், நம் முன்னோர்களுக்கு மிக்க சுகம் தந்ததுமான இந்துமத ஜாதியாசாரங்களை விட்டுவிட, அறிவுடையோனாகிய எவனும் துணிந்திடான். "உலகத்தில் வசிப்பது ஓர் நிலையுடையதல்ல; வேதமுடிவுகளோ பல தன்மைத்து; ரிஷிகளோ பல முடிவுகளைக் காட்டினார்கள்; எவர் மதத்தை நாம் நம்புவது! தருமத்தின் உண்மையறிவதோ, மிக அரிது. ஆதலால், மகாஜனங்கள் எந்தவழி ஏகின்றனரோ அதுவே நமக்கு நல்வழி." என்று பெரியோர் உரைத்த நியாயத்தையனுசரித்து, நமது பெரியோர் சென்ற வழியே மேலென்பது நமக்கு உசிதமாகத் தோன்றுகின்றது. இதனால் நாம் ஜாதிவிஷயத்தைக்குறித்துச் சொல்லிவந்தனவற்றில், எமது சொந்த அபிப்பிராயம் இன்னதென்று அறிய விரும்புகின்ற எமது நண்பர்கள், இப்பொழுது முடிவில் நன்றாய் எமது அபிப்பிராயத்தை வெளியிட்டோமாதலால், ஒருவாறு திருப்தியடைந்திருப்பார்களென்று நம்புகிறோம். தற்காலத்திலுள்ள புத்திமான்களிலும் அதிக புத்திவாய்ந்து, பல கிரந்தங்களைக் கண்டுபிடித்துப் பெருமைபெற்ற நம் முன்னோர்கள், ஜாதியென்பது எவற்றினும் சிறந்ததாகையால் அது ஒருக்காலும் கெடுதியடையலாகாது என்று அபிப்பிராயப்பட்டதாய்த் தெரிகிறபடியால், தருமம் இதுவென்றும், அதர்மம் இதுவென்றும் அறிந்த பெரியோர்கள் முடித்த முடிவே மிகவும் ஒப்புக்கொள்ளத்தக்கதாயிருப்பதால், அதுவே எமக்குச் சம்மதமென்க.

[மொழிபெயர்ப்பு.]

பாகவதவசனம்.

[முன் தொடர்பு.]

நான்காம் அத்தியாயம்.

முற்கூறியவாறு அருளிச்செய்து சூதமாமுனிவர் ஓய்ந்தவுடனே, அதனைக் கேட்டிருந்த மகாரிஷிகள் அனைவரும் சித்திரத்திலமைந்த பதுமைகள்போல அசைவற்று, ஆனந்தசாகரத்தின் மூழ்காநிற்க, அங்கெழுந்தருளியிருந்த ரிஷிகுலோத்தங்கரும், இருக்குவேதியுமான ஸ்ரீசௌனகமகாரிஷியானவர், கண்களில் ஆனந்தபாஷ்பந் ததும்ப, சூதமுனிவரை நோக்கிப் பலவாறு துதிசெய்து பின்வருமாறு வினவுவாராயினர்: நாவன்மையிற் சிறந்து உபந்யாசகரான புராணிகமணியே! தாம் அடியேங்கள்மாட்டு வைத்த பெருங்கருணையினால், ஸ்ரீசுகமுனிவர் உபதேசித்தருளிய ஸ்ரீபாகவதசரித்திரத்தைத்தமியேங்கட்

[illegible]

கு அருளிச்செய்வதாய்த் திருவாய்மலர்ந்தருளியதற்குத் தமியேம் பரமானந்தபரிதரானேம். அதுவிஷயத்தில் அடியேங்கட்கு ஓர் சங்கைதோன்றுகின்றமையால், அதனைத்தீர்த்தருளல் வேண்டும். வாதராயணுசாரியனென்னும் ஸ்ரீவேதவியாசபகவான் எந்த யுகத்தில், எந்தவிடத்திலிருந்து, யாதுகாரணம் பற்றி, எவருபதேசத்தால் இந்த ஸ்ரீபாகவதத்தை யருளிச்செய்தார்? யோகிகட்கிறைவராய், பிரமநிஷ்டையிற் சிறந்தவராய், குழந்தைகள்போல் ஓர் பொருளினும் பற்றற்றவராய் நின்ற அச் சுகமுனிவர், குருஜாங்கலதேசத்திற்கு எதன்பொருட்டு வந்தனர்? பட்டணத்திலுள்ள ஜனங்கள் கண்ணுக்கு எவ்வாறு புலப்பட்டனர்? இம்மகான்மா ஆண், பெண் முதலிய உலகநடையைக் கடந்தவராயிற்றே! அதுகொண்டன்றே முன்னேர் சமையத்துச் சில மங்கையர், திருவாணிகளாய் ஓர் தடாகத்தில் சலக்கிரீடை செய்துகொண் டிருக்கும்பொழுது, அவதூதராய சுகமுனிவர் யௌவனப்பருவமுடையராயிருப்பினும் அவர் வரவைக்கண்டு ஆடைகளைத் தரியாது, விருத்தராயும், வஸ்திரமணிந்தும் வரும் வியாசமுனிவரைக்கண்டு ஆடைகளைத் தரித்துக்கொண்டனரென்று சொல்லுகிறார்கள். இங்ஙனம் ஏகாந்தப்பிரியராய் வனத்திலே சஞ்சரித்துவரும் அம்மகானுடைய தரிசனம் பரிச்சித்துமகாராஜனுக்கு எங்ஙனங் கிடைத்தது? அம்மகான், ஓர் பசுக் கறக்குநேரமன்றே ஓர் இருகஸ்தன்வீட்டில் பிக்ஷையேற்க நிற்பது? அபிமன்னுவின் குமாரனுன அப் பரிச்சித்துவும் மகா பாகவதனுயிற்றே! ஆகையால், இவற்றிற்கு உத்தரமும், அவரது ஜன்மசரித்திரமும் கேட்டற்குப் போவாவுற்றேம். தாமே சகல சத்துருசங்காரஞ்செய்து, ஏகசக்கிராதிபத்தியம் புரிந்துவந்த பரிச்சித்துமகாராஜன், தனது குலபாரம்பரியமாகக் கிடைத்த இராச்சியத்தை விடுத்து, கங்காநதியின் மத்தியில் பிராயோபவேசம் [அஃதாவது மரணபரியந்தம் செய்யும் உபவாசம்] பண்ணினதற்குக் காரணமென்னே? பரோபகாரமே குலவிருதாய்க் கொண்டு அங்ஙனிபற்றுதற்குப் பெருங்கருவியாகிய சரீரத்தைத் துறக்க அவன் எவ்வாறு துணிந்தான்? இவைகளுக்கு உத்தரமளித்தருள வல்லவர் நீரே. உமக்கே வேதவியாசர் வாயிலாகப் புராணரகசியங்கள் கிடைத்திருக்கின்றன. நீரே இதன் உண்மையை அருளிச்செய்தல்வேண்டும் என்று சௌனகர் பிரார்த்தித்தலும், சூதர், அன்புகூர்ந்து அவைகட்கு உத்தரங்கூறுவாராயினர்: ஓ முனிவர்களே! மூன்றாந்துவாபரயுகம் முடியுங்காலத்தில் [அதாவது கிருதம் க. திரேதை உ. துவாபரம் ௩. ஆய இவற்றுண் மூன்றாவதென்றே பொருளாம். வேறுவிதங்கொள்ளின், பல விரோதம் வருமென்பதைச் சென்ற சஞ்சிகை இதிகாசத்திற் காண்க.] பராசமகாரிஷிக்கும் சத்தியவதிதேவிக்கும் ஸ்ரீநாராயணுமிசமாக ஸ்ரீவேதவியாசர் அவதருரித்தருளினூர். அவர், ஒருநாள் சரஸ்வதியாற்றின் கரையை அடைந்து, சகல பாவங்களையும் போக்கவல்ல அந்நதியின் பிரவாகத்தில் ஸ்நானஞ்செய்து சூரியோதயமாகும்பொழுது அக்காலத்திற்செய்பவேண்டிய நித்தியகருமங்களை முடித்து, தமது தவப்பயனாகிய ஞானதிருஷ்டியினுல் தருமரகசியங்களனைத்தையும் ஒருவாறுணர்ந்து, அவைகள் குன்றிவரும் நிலைமையையும், அத்தருமக்குறைவால் பிராணிகளுக்குண்டாகும் சக்திக்குறைவையும், நற்செய்கைகளில் அவநம்பிக்கையையும் சிறிது சிந்தித்து மன

[illegible]

முருகி, இனி நாம் வருணாசிரமங்களைக் காப்பதெங்ஙனமென் பதைப்பற்றிச் சிலகாலம் சிந்திப்பாராயினர். பின், அனேகமாய் ஒன்றுபட்டுப் பெரிதாயிருந்த வேதத்தை நான்காகப் பகுத்து; அப்பாகங்களாகிய இருக்கு, யஜுர், சாமம், அதர்வம் என்பனவற்றை, தமது சிஷ்யர்களாகிய பைலர், வைசம்பாயனர், சைமினி, சுமந்து என்போர்க்கு முறையே உபதேசித்து, அங்ஙனமே ஒன்றாயிருந்த புராணங்களைப் பதினெட்டாகப் பகுத்து, அவற்றினையும் தமது சிஷ்யனாகிய சூதமுனிவருக்கு உபதேசித்தருள, பின்னர், அவர்கள் சிஷ்யபரம்பரையால் வேத புராணங்கள் எங்கும் விருத்தியாக்கப்பட்டன. அவ் வியாசசிஷ்யராகிய நான்கு முனிவர்கள் வியாசரிடமிருந்து பெற்றுக்கொண்ட வேதங்களைக் காண்டங்கள், பிரஸ்னங்கள், அனுவாகங்கள் என்று பல பகுப்புகளாக்கித் தமது சிஷ்யர்களுக்குபதேசிக்க, அவைகள் விருத்தியாயின. வேதாதிகாரமில்லாத சூத்திரர், ஸ்திரீகள், பதிதப்பிராமண ராதியோர்க்கு நற்கதியையுபதேசிக்கக் கருதி, ஸ்ரீ மகாபாரதமென்கின்ற ஓர் பெரிய இதிகாசத்தை இயற்றியருளினர். இங்ஙனம் உலகத்திலே பிறந்து வாழும் உயிர்கள் அனைத்திற்கும் கருணைமாரிபொழிந்து ஜனனக்கடலைக் கடந்து நற்கதிபெறும் வழிகாட்டக் கங்கணம்பூண்ட ஸ்ரீவேதவியாசமுனிவர், தமது சித்தம் தெளியாததுபற்றி மிக்க விசனமுற்று “நாமோ வேதங்களின் பொருளை வெளியிட்டோம். சற்குருவின் கிருபையைப் பெற்றோம். பாரதத்தால் சகல தருமரகசியங்களையும் வெளியாக்கினோம். இங்ஙனமாகவும் எம்மனம் பரிபாகமடையாத தென்னை? எக்காலத்தும் இடையறாது பிரமத்தியானஞ்செய்து ஆன்மா சுகமடையக்காணேம். ஒருவேளை நாம் பாகவததருமங்களைப்பற்றி நன்றாயெடுத்துரைத்திலமோ! வேறென்செய்வோம்! யாதுசெய்தால் மனம் ஓய்வுறும்” என்று பலவாறு துக்கித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ வேதவியாசமுனிவர் இருப்பிடத்திற்கு அகஸ்மாத்தாய் ஸ்ரீ நாரதமகாமுனிவர் எழுந்தருளினர். உடனே வேதவியாசமுனிவர் அங்கெழுந்தருளிய நாரதமுனிவரைப் பலவித உபசாரங்களால் சந்தோஷிக்கச்செய்தார் என்று நான்காமத்தியாயம் கூறுகின்றது.

ஐந்தாம் அத்தியாயம்.

பின் அங்கெழுந்தருளிவந்த நாரதமகாமுனிவர் ஸ்ரீவேதவியாசமுனிவரைப் பார்த்து, ஓ! வியாசாசாரியரே! நீர் வேதார்த்தங்களனைத்தும் அமைந்த ஸ்ரீமகாபாரதத்தை அருளிச்செய்தீரன்றோ? அதனால் உமக்கு மனத்தெளிவும், ஆன்மசுகமும் உண்டாகின்றதா? நீரோ, கற்கவேண்டியவனைத்துங் கற்றீர்; உணரவேண்டியவனைத்தும் உணர்ந்தீர்; செய்யவேண்டியவனைத்துஞ் செய்தீர்; பரவஸ்துவை நன்றாக அறிந்தீர்; மிக்க மேன்மையையும் பெற்றீர். அங்ஙனமிருக்க, உமது திருமுக மண்டலத்தின்கண்ணே ஏதோ ஒருவிதம் தோன்றும் வாட்டத்திற்குக் காரணமென்னை? என்றின்னவாறு வினவுதலும், அது கேட்ட ஸ்ரீவேதவியாசமுனிவர், அந் நாரதமுனிவரைப் பார்த்துச் சொல்லுகின்றார்: ஓ நாரதமுனிவரே! நீர் கூறியவண்ணம் எல்லாவிஷயமும் என்னிடத்தே பூரணமாயமைந்திருத்தல் உண்மையே. ஆயினும், யாதுகாரணத்தாலோ அறியேன்!

[illegible]

என் மனம் ஒருவாற்றானும் ஓய்வடைந்தில; ஆன்மாவும் சந்தோஷித்தில. எல்லாவற்றையும் அறிந்து, எங்கும் சென்று, திரிகாலநிலைமையையும் செவ்வேயுணர்ந்து, பிரமநிஷ்டையிற் றவிராத தவமணியே! நீரோ, என்னிடத்து ஆன்மதிருப்திக்குத் தடையாக நேர்ந்திருக்கும் குறையை இன்னதென்று அருளிச்செய்தல்வேண்டும் என்றனர். இங்ஙனம் வேண்டிநின்ற ஸ்ரீவேதவியாசமுனிவரை நாரதமுனிவர் பார்த்து, நீர் உலகத்தாரறியவேண்டிய பலவித தருமங்களையுங் கற்றுணர்ந்தீர். அவைகளைப்பற்றி அநேக நூல்களையும் இயற்றினீர். அர்த்த சாஸ்திரத்தையும் வெளியிட்டீர். ஆயினும், ஸ்ரீபகவானுடைய திருவுள்ளங் குளிரவைக்கும் கருவியாய ஸ்ரீ பாகவததருமங்களைப்பற்றிச் சிறிதுங் கவனித்திலீர். உலகத்தில், எவ்வளவு சிறப்புவாய்ந்த நவரசபரிதமாயிருக்கும் வாக்கியமாயிருந்தாலும் அவை ஸ்ரீ பகவத்குணங்களைப்பற்றிச் சிறிதேனும் சொல்லாவிடில், அவைகளைப் பெரியோர் மதிப்பதுமில்லை; செவிக்கு விருந்தாக்கொள்ளவுமாட்டார். ஒவ்வோரெழுத்தும் இலக்கணப்பிழையாகவே நிரம்பியிருப்பினும், அவை ஸ்ரீ பகவானுடைய குணங்களை வர்ணிக்க எழுந்த வாக்கியங்களாயிருக்குமாயின், அவைகளைப் பெரியோர்கள் மிக ஆவலுடன் கேட்பார்கள். அவற்றின் பொருள்களையும் உள்ளத்தமைப்பார்கள். உலகத்திலே சன்மவலையைக் கடத்தற்குப் பெருங்கருவியாகிய மெஞ்ஞானமும் ஸ்ரீபகவானிடம் கற்பனைசெய்யப்படாதாயின், பெருமையடையாவாம். காமியகன்மம், நித்தியகன்மம் ஆகிய இருவகைக் கன்மங்களும் பகவதர்ப்பணமாகாவிடின், ஒருபொழுதும் அதற்குரிய பயனைத் தாரா. நீர் காமியகன்மங்களையே எடுத்து விரித்துக்கூறினமையால், ஒவ்வோருயிர்க்கும் பிரவிருத்திவழி பெருகி நிவிருத்திவழி குன்றுமாதலின், அஃதோர் பெருங்கொடுமையே. எவ்வளவு அறிவுள்ளவனாயினும் அவன் நிவிருத்திமார்க்கத்தை யடையாதவனாயில் ஒருபொழுதும் ஸ்ரீ பகவானுடைய இயல்பையும், குணங்களையும்பற்றிச் சிறிதுமுணரமாட்டான். ஆதலால், ஸ்ரீவாசுதேவனுடைய திவ்வியகுணங்களை எக்காலத்திலும் மறவாது தியானித்துக்கொண்டு, லோகோபகாரமாக ஸ்ரீவாசுதேவகுணங்களை வெளியிடும் ஓர் நூலினையும் அருளிச்செய்யக்கடவீர். ஒருவன் தன் குலதருமத்தையும் விட்டு, ஸ்ரீ பகவத்குணானுபவங்களிலாழ்ந்து முடிவெய்தாது நழுவினும், இடையே இறக்கினும் அவன் சுயதருமத்தை விடுத்ததாலுண்டாகுங் கெடுதி, அவனை ஒருகாலத்தும் வந்தணுகாவாம். எந்தத் தருமந்தான் கேவல கருமானுஷ்டானஞ்செய்துவரும் மனிதர்களால் சாதிக்கக்கூடியதாகும். ஜன்மாந்தரங்களிற் செய்திருக்கும் புண்ணிய பாவங்களுக்கேற்பக் கன்மவாசனை யுண்டாகுமாதலாலும், மோக்ஷேச்சை அங்ஙனம் எளிதில் உண்டாகாதாதலாலும் இவ்வுலகின்கண்ணே மனிதப்பிறப்பையடைந்த ஒவ்வொருவரும் மோக்ஷத்திற்காகப் பிரயாசைப்படவேண்டியது அத்தியாவசியகமாம். உலகத்திலே கன்மபரனுயுள்ளவன் அடிக்கடி சம்சாரவலையிற் சிக்குவதுபோல, வாசுதேவபக்தனானவன் ஒருபொழுதும் அவ்வலையில் அகப்படான். அந்த ரசிகன் அப்பெருமானது திருவடிமலர்களை எக்காலத்தும் மறக்கமாட்டான். சாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணனுமிசமா யவதரித்து அறியவேண்டியதும், அறியக்கூடியதுமான யாவற்றையும் அறிந்துகொண்ட உமக்கு நான் அதிகமாக உரைத்தற்பாலதே

[illegible]

ன்னை? அதுடற்றியே நான் ஏதோ ஞாபகப்படுத்தினேனே யன்றி வேறில்லையென்றெண்ணுக. ஆதலின், உமது நிஜாம்சத்தைச் சற்றே கவனித்து ஸ்ரீஹரியின் பெருமையை நன்றாக விளக்கக்கடவீர். முற்காலத்துதித்த மகாரிஷிகள் பகவத்குணானுபவமே சகல யாகங்களுக்கும் அனேக சருமங்களைத்திற்கும் பயனென்று நம்பினார்கள். யான் முன் சனனத்திலே ஒருவனுக்கு ஓர் தாசியிடத்துப் பிறந்தவனாயிருந்தேன். தாயானவள் என்னைப் பாலியத்திலேயே சாதுர்மாசியகாலத்தில் ஓரிடம் நிலைபெற்று வசிக்கும் சந்நியாசிகளுக்குப் பணிசெய்ய நியமித்தனள். நான் தாய்சொற்றவறாது, அம்மகான்கள் சித்தங்களிகூரும்படி அவர்கள் கட்டளையிட்ட பணிகளைத் தவிராது செய்துகொண்டேவருதலும், அவர்களுக்கு என்மீது மிக்க கிருபை தோன்றிற்று. அவர்கள் தாம உபயோகித்துக்கொண்ட உணவின் சேடத்தைக்கொண்டு எனது பசியைத் தணித்துக்கொள்ள உத்தரவளிக்க, நான் அங்ஙனமே செய்துவந்தேன். இவ்வாறு அந்தச் சத்துக்களின் அன்னத்தைப் புசித்த எனக்கு நாளுக்குநாள் உள்ளந்தெளிந்து பகவத்குணானுபவத்தில் மனம் புக்கது. அவர் திருவடிகளில் அன்புண்டாயிற்று. தினந்தோறும் அவர்கள் வாசுதேவன் குணங்களைக் கானஞ்செய்ய, நான் அவைகளைப் பேரன்போடு கேட்டுவருதலுண்டு. அதனால் எனக்கு வாசுதேவனிடத்திலே வரவர அன்பு மீக்குற்றது. பின் காலக்கிரமத்தில் எனக்கு இப் பிரபஞ்சவிகற்பம் ஒழிந்து, என்றும் சத்தியமாய பிரமப்பொருளிற்றோன்றியதே இவ்வுலகம் என்னும் பாவனையும் உண்டாயிற்று. இங்ஙனம் அவர்களுக்குத் தொண்டுபுரிந்து வாசுதேவபஜனையுஞ் செய்து அந்த நான்கு மாசங்களையுங் கழித்தேன். பின் அவர்கள் வெளிச்செல்லும்பொழுது என்னிடம் கருணைகூர்ந்து எனக்கு வாசுதேவபக்தியைப் பெருக்கி மாயாவஸ்துவினியல்பைக் காட்டிப் பிரமானந்தசுகத்தை நிலைபெறச்செய்யும் பாகவதத்தை உபதேசித்தார்கள். அந்தச் சாஸ்திரத்தில் பகவதர்ப்பணமாகிய கன்மங்கள் சமஸ்த பாசங்களையும் அறுக்குமென்பது சொல்லப்படுகிறது. எங்ஙனம் உலகத்தில் வியாதியை விருத்திசெய்யும் நெய்முதலிய வஸ்துக்களே மருந்துகளிற்சேர்ந்து வியாதியை நிவிருத்திசெய்கின்றனவோ அங்ஙனமே ஜன்மவலையிற் கட்டும் கன்மங்கள் பகவதர்ப்பணமானால் அவைகளே சம்சாரபாசத்தை அறுக்குங் கருவிகளாகும். பகவதர்ப்பணமாகச் செய்யப்படுங் கன்மங்கள் ஸ்ரீபகவத்பக்தியையும், ஞானத்தையும் உண்டாக்கும். பெரியோர்கள், தமக்கு உத்தமமான ஞானங் கிடைத்திருப்பினும் ஸ்ரீ பகவானிட்ட கட்டளையென்றெண்ணி அவரது ஆஞ்ஞையைச் சிரமேற்கொண்டு, தாம் செய்யவேண்டிய கடமைகளை முடிப்பார்கள். எப்பொழுதும் பகவந்நாமங்களையே உச்சரிப்பார்கள். அவற்றையே தியானஞ்செய்வார்கள். "வாசுதேவப்பிரத்தியும்னஸங்கருஷணரூபனாகிய பகவானுக்கு நமஸ்காரம். அவனை எப்பொழுதும் தியானிப்போமாக." என்னும் மந்திரத்தால் தமதுள்ளத்தில் பகவத்குணங்களை இடைவிடாது அனுபவித்துவருபவனே உலகத்தில் ஞானியெனப்படுவன். நான் பெரியோர் உபதேசித்தவழி மாறாமல், அவரைப் பஜனை செய்தேன். அதனால், ஸ்ரீ பகவான் என்னிடத்தே கிருபாநோக்கம்புரிந்தருளி எனக்கு நிலைபெற்ற ஞானத்தையும், தம்மிடத்து நீங்காத பக்திச்செல்வத்தையுந் தந்தருளினார். ஆத

[illegible]

லால், நீரும் இவ்விதமே ஸ்ரீ வாசுதேவனிடத்தே அன்பைப் பெருக்கி அவரது திவ்வியசரித்திரங்களைக் கானஞ்செய்து பெரியோர் மனங்குளிர அவரைக் குறிக்கும் ஓர் நூலையும் அருளிச்செய்வீராக என்று சொல்லிமுடித்தாரென்று ஐந்தாமத்தியாயத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

ஆறும் அத்தியாயம்.

அதுகேட்ட வியாசாசாரியர், அந்தச் சந்நியாசிகள் தேசாந்தரமடைந்தபிறகு, பாலனுயிருந்த நீர் யாதுசெய்தீர்? எவ்விதம் உமக்கு அந்த ஜன்மம் தொலைந்தது? இவ்வுண்மையை எனக்கு அருளிச்செய்தல்வேண்டும் என்று கேட்டலும், நாரத முனிவர் சொல்லுகின்றார்: அங்ஙனம் உபதேசித்து அம்மகான்கள் சென்றவுடனே, என்னையே புத்திரனுகக்கொண்டு எனது வியோகத்தைச் சகிக்காத எனது தாயின் சரீரம் நீங்குங் காலத்தை எதிர்பார்த்து, அவளிருக்குமிடத்திலேயே சிலநாளிருந்தேன். பின் ஒருநாள் பசுக்கறக்கும்பொருட்டு வெளியே சென்ற என் தாயானவள், அரவின்வாய்ப்பட்டுப் பரலோகமெய்தினுள். நான் அக்காலத்தில் ஐந்துவயதுள்ள சிறுவனேயாயினும், தாயானவள் பரலோகஞ்சென்றதும் பரவாசுதேவகிருபையென்றே யெண்ணி, அவ்விடத்தை விட்டு உத்தரதேசத்திலே பல க்ஷேத்திரங்களை அடைந்து வணங்கிக்கொண்டு பல தேசங்களையும் கண்டு களித்து, பல கிராமங்களையும், காடுகளையும், மலைகளையும், மற்றப் பலவித இடங்களையும் அடைந்து, அவ்விடங்களில் பகவத்பஜனஞ்செய்துகொண்டு, அனேக புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து முடிவிலே கொடிய மிருகங்கள் சஞ்சரிக்கும் ஓர் பெரிய வனாந்தரத்தை அடைந்தேன். அவ்விடத்தில் எனக்கு உண்டான பசியைத் தணித்துக்கொள்ளும்பொருட்டு ஓரிடத்திற் சென்று அங்கு ஓர் தடாகமிருக்கக் கண்டு அதை அடைந்து அதன் மதுரமான தீர்த்தத்தைச் சிறிது உட்கொண்டு திருப்தியடைந்து அங்குள்ள ஓர் அரசமரத்தின நீழலில் உட்கார்ந்து பரமான்மாவை உள்ளத்திலே தியானஞ் செய்தேன். இங்ஙனந் தியானஞ்செய்யுங்கால், எனது உள்ளத்திலே பகவான் பிரத்தியக்ஷமாகி அனுக்கிரகித்தலும் நான் தன்னைமறந்து தானுய்த் தனித்துநின்று பரமானந்த பரிதனுனேன். ஒரு கணத்தில் அத்தகைய ஜகன்மோகனரூபம் காணப்படாது மறைந்ததுகண்டு, உடனே நீங்காததுயரெய்தி எழுந்து பலவிடங்களிலும் அலைந்துதிரியும்பொழுது ஆகாயத்தில் "உனக்கு இச் சனனத்திலே எமது தரிசனங்கிடைக்கமாட்டாது. நாம் காமக்குரோதாதிகளில் ஆழ்ந்தவர்களுக்குத் தரிசனங்கொடேம். ஆயினும், நீ நெடுங்காலமாகச் செய்துவந்த பெரியோர் பக்தியால் உனக்குண்டான பகவத்பத்தி ஸ்திரமாகவிருக்கும். இப்பொழுது நீ செய்த ஓர் பக்தியின் பயனாக உனக்கு மேல்வரும் சனனங்களிலும் இந்தச் சனனஞானமிருக்கும். இப்பொழுதுள்ள உனது பௌதிகசரீரம் நீங்கித் திவ்வியசரீரத்தையடைந்து எனக்குப் பாரிஷதனுயாகும்பொழுதுதான் உனக்கு எமது தரிசனங்கிடைக்கும்" என்று ஓர் அசரீரி தோன்றிற்று. அங்ஙனந் தோன்றிய அசரீரிவாக்கைக் கேட்டு ஆனந்தங்கொண்டு பேரன்புடன் பகவானுடைய திருவடிகளைச் சிந்தித்துப் பணிந்து அவ்விடம்விட்டுப் புறப்பட்டுப் பலவிடங்

[illegible]

ப்ரஹ்மவித்யா.

ஸம்ஸ்க்ருதபாஷா.

இதிஹாஸ:

[அநுபந்த:]

—:(*):—

[illegible]

களுக்குஞ் சென்று அப்பெருமானது திவ்வியகுணலாபங்களைச் செய்துகொண்டு நாணநீங்கி பகவத்பக்திசெய்துகொண்டு இறுதியில் சரீரத்தைவிட்டு உலகமொடுங்கும்பொழுது ஸ்ரீநாராயணயோகநித்திரைசெய்ய உத்தேசிக்கும் பிரமதேவன் சுவாசமார்க்கத்தால் அவரது கருப்பத்தையடைந்தேன். பிரளயம் முடிந்து மறுசிருஷ்டிசெய்ய ஆரம்பிக்கும் பிரமதேவன் பிராணவாயுவினின்று புலஸதியர், புலகர்முதலிய மகாரிஷிகள் உதித்தாற்போல நானும் அவர்களோடு அப்பிரமதேவனுடைய பிராணவாயுவின்வழியாக வெளிவந்தேன். அதுமுதல் எவ்வுலகங்களுக்குஞ் செல்லத் திறமைபெற்று எங்குஞ் சென்று அவ்வுலகங்குள்ள விசேஷங்களைக் கண்டு களிப்புற்றும், பிரமதேவன் எனக்கு ஈய்ந்தருளிய சத்தப்பிரமஸ்தானமாகிய வீணையைக் கொண்டு பகவத்குணங்களைக் கானம்பண்ணிக்கொண்டு மூவுலகங்களிலுஞ் சஞ்சரித்துவருகிறேன். அவருடைய திவ்விபகுணங்களைத் தியானஞ்செய்யுந்தோறும் எனதுள்ளத்தில் ஸ்ரீபகவான் குடிகொண்டேயிருக்கிறார். சம்சாரசாகரத்தைக் கடக்கக்கருவியாயுள்ளது ஸ்ரீஹரிகீர்த்தனமேயென்பது உண்மையேயாம். என்று இவ்வாறு சொல்லி வாதராயணமுனிவரிடத்தே விடைபெற்றுக்கொண்டு தேவரிஷியாகிய நாரதர் அவ்விடத்தைவிட்டு எழுந்தருளினார். ஓ! சௌனகாதி மகாரிஷிகளே! உலகத்திலே பிறப்பையடைந்த ஆன்மாக்களெல்லாம் நற்கதிபெற்றுய்யுமாறு வீணாபாணியாய் எழுந்தருளி யனுக்கிரகிக்கும் நாரதமகாமுனிவருடைய பெருமையை யாதென்றுகூறுவேன்! என்று சூதர் சொல்லி ஓய்வுற்றனர்.

[மொழிபெயர்ப்பு.] வரும்.

இங்ஙனம்

சிதம்பரவாசி,

மலைங்குடி, ரா. ஹாலாஸ்யநாதசாஸ்திரி.

ப்ரம்மவித்தியா.

சம்ஸ்கிருதபாஷை.

இதிகாசம்.

[முன்தொடர்பு.]

நாம் ஸ்ரீமகாபாரதத்தைக் குறித்துப் பற்பல விஷயங்களை எழுதிவருகின்றோமென்பதை அநேகர் அறிந்திருக்கின்றார்கள். அதுவிஷயத்தில் பலர் பலவாறு அபிப்பிராயப்பட்டிருக்கின்றார்கள். அவருள்ளே ஒருசிலர், இப்பாரதம் புராணமென்று சாதிக்கிறார்கள். வேறுசிலர், அஃது புராணமன்று, வேறுகும் என்கின்றனர். மற்றுஞ்சிலர், இது ஐந்தாம்வேதமென்று வழங்குகிறார்கள். பின்னுஞ்சிலர், அங்ஙனமன்றென்று நிலைநாட்டுகிறார்கள். சிலர், இது புராணங்களின் சாரமாமென்கின்றார்கள். சிலர், நேரே வேதசாரமென்கின்றார்கள். சிலர், இதிகாசமென்பதிதுவேயென்கின்றார்கள். சிலர், வேறுசில இதிகாசங்களும் இருக்கின்றனவென்கின்றார்கள். சிலர், இதிகாசங்கள் வேறுபல விருப்பினும் இதுவே அவற்றுட் சிறந்தது என்கின்றார்கள். சிலர், வேறு இதிகாசமிருப்பதாயும், அதுவே சி

[illegible] पुराणस्य श्रीमद्भगवद्बादरायणेन संगृहीतानां; तथा [illegible] तस्य [illegible] संग्राहकस्य च [illegible] 'अष्टादशपुराणानि कृत्वा सत्यवतीसुतः। भारताख्यानमखिलं चक्रे तदुपबृंहणम्'' इत्यादिना पुराणमेवोपबृंहणमिति, [illegible]. [illegible] ''इतिहासपुराणानामुन्मेषं निर्मितं च यत्'' इति द्वितीयाध्याये 'अस्याख्यानस्य विषये पुराणं वर्तते द्विजाः'' इति [illegible] पुराण [illegible]; तथा [illegible] पुराणानां [illegible]'' इति [illegible] ''अस्याख्यानस्य विषये पुराणं वर्तते द्विजाः'' इति [illegible] ''पुराणानां [illegible]'' इति [illegible] पुराणं अष्टादशानां [illegible]'' इति [illegible] पुराणसंभवं [illegible]। [illegible] इति। [illegible] ''[illegible]'' [illegible] 'महाभारतं [illegible]' ''भारतं [illegible]'' इत्यादिषु [illegible] ''इतिहासपुराणं पञ्चमं वेदानां वेदम्'' इति [illegible] ''वेदान् [illegible]'' [illegible] महाभारतस्य [illegible]। ''इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत्'' इति इतिहासस्य वेदा [illegible] श्रीमहाभारते श्रीमहाभारतं [illegible] ''[illegible]'' इति [illegible] वेदे [illegible] ''[illegible]'' [illegible] ''[illegible]'' इति [illegible] 'कार्ष्णं वेदम्' [illegible] इत्यादावपि वेदत्व [illegible]

றந்ததென்றும் சொல்லுகிறார்கள். ஆகையால், மேற்கண்ட வாதிகளின் கொள்கைகளுக்கு ஆதாரமாயுள்ளவைகளை இனிது விளக்கிக்காட்டி, பின்பு, எல்லா வாதிகளும் ஒன்றுபடவேண்டிய சித்தாந்தத்தையும் எமது புத்திக்கெட்டியமட்டில், பெரியோரிடத்து நாம் கேட்டறிந்த கேழ்விகளுக்கிசையச் சிலவற்றை இங்கே எழுதுவாம்.

அவற்றுள்ளே முதற்கண் இது புராணமா, புராணமன்றா வென்பதைககுறித்து விசாரிப்போம்: இது புராணமென்று சொல்வதற்குக காரணம் அப்பாரதத்திலேயே பலவிடங்களில் பாரதத்தைப் புராணமென்னுஞ் சொல்லா லழைத்தலேயாம். எவ்விடத்திலென்னில், ஆதிபருவம் முதலாமத்தியாயத்திலே (द्वैपायनेन यत्प्रोक्तं पुराणं परमर्षिणा) "வாதராயணமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய புராணம்" என்றும், அதே பருவத்தில் அறுபத்திரண்டாமத்தியாயத்தில் (श्राव्याणामुत्तमं चेदं पुराणमृषिसंस्तुतम्) "பல ரிஷிகள் போற்றுந் தகைமைபெற்ற இப்புராணம் கேட்கத்தக்கனவற்றுள் உத்தமமானது" என்றும் பெறப்படுவனவற்றால் நன்றாக வெளியாகின்றது. ஆகையால், இதனைப் புராணமென்று சொல்வதில் தடையென்னையெனில், அங்ஙனமாயினும் புராணங்கள் நாலுலக்ஷங் கிரந்தங்களுள்ளனவென்று முன்பு புராணங்களைப்பற்றி யெழுதியபோழ்தே வெளியிட்டிருக்கின்றோம். அவைகள் "பிராம்மீ" "பாத்மம்" முதலிய பதினெட்டுப் பாகங்களையுடையன. அது அநாதியான புராணங்களிலிருந்து சுருக்கியெழுதப்பட்டது. அவைகளின் சாரமாக இந்தப் பாரதம் எழுதப்பட்டதாய் மச்சபுராணத்தில் "பதினெண் புராணங்களையருளிச்செய்து வியாசபகவான் அதன் கருத்துக்களையடக்கிப் பாரதத்திலமைத்தார்" என்னும் வசனமிருப்பதால், இது புராணசாரமென்றே வெளியாகின்றது. பாரதத்திலும் மற்றோரிடத்தில் "இதிகாசபுராணங்களின் உண்மையை இது விளக்கும்" என்று இருத்தலும் "இந்தக் கிரந்தத்தின் விஷயத்தில் புராணமிருக்கின்றது" என்று இரண்டாமத்தியாயத்தில் வசனங் காண்டலும் இந்த விஷயத்திற் சாக்ஷியாகும். மேலும், இதிலுள்ள விஷயங்களைச் சொல்லுமிடத்தில் "எல்லாப் புராணங்களினுண்மையும் இதிலுண்டு" என்றிருத்தலாலும் இது புராணசாரமேயன்றிப் புராணமன்றெனபது வெளியாகும். அதுகொண்டே "இந்தக் கிரந்தத்தின் விஷயத்தில் புராணம் இருக்கின்றது" என்னும் வாக்கியத்தை வியாக்கியானஞ்செய்த ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதரென்பவர் நன்றாய் "விஷயத்தில் உள்ளே 'புராணம்' பிராமம் முதலிய பதினெண்வேற்றுமைபெற்ற கிரந்தம்" என்று உரைசெய்தார். இதனால் முடிந்தமுடிவு யாதெனில், இதனைப் புராணமென்றழைப்பது உசிதமன்று. இது புராணமுமன்று. மகரிஷியால் அருளிசசெய்யப்பட்டதாதலின், இது புராணமென்று உபசாரமாகச் சொல்லப்பட்டதென்பதே உசிதமாம். இதுநிற்க.

இனி, இது வேதமா, அன்றி வேதார்த்தத்தைக் காட்டும் வேறு நூலா என்னும் இரண்டாமாசங்கையைப்பற்றி விசாரிப்பாம்: இதை வேதமென்று பலவிடங்களில் எழுதியிருக்கின்றார்கள். "வியாசர் அருளிய வேதம் ஐந்தாவது. பாரதத்தை ஐந்தாவதாகக்கூட்டி வேதங்களை ஓதுவித்தான்,, என்பதாதிப் பிரயோகங்களைக் காண்க. ஆசாரியசுவாமிகள் பாஷியத்திலே "ஐந்தாவதான பாரதத்துடன்கூடிய வேதங்களின்,, என்றும்

[illegible]

எழுதியிருக்கிறார். இவ்வளவு இருப்பினும் அப்பாரதத்தை யருளிச்செய்தவர் "இதிகாசத்தாலும், புராணத்தாலும் வேதத்தின பொருளறிக,, என்று இதிகாசம் வேதத்தைப் பொருள்படுத்தற் கருவியென்று எழுதியதுமன்றி, பாரதத்தில் தாமே நேரில் பிரமதேவனிடம் தாம் செய்த பாரதத்தைக்குறித்துச் சொல்லும்பொழுது "நால்வேதப்பொருளுடன் கூடியது,, என எழுதியும், இதிலடங்கிய விஷய அட்டவணையில் "இருக்கு, யஜுர், சாமம், வேதாந்தம்,, என்பன இதிலடங்கியதாய்க் காட்டியும் இது வேதசாரமேயொழிய வேதமல்லவென்று வெளியிட்டிருக்கின்றார். அதுபற்றியே அவர் கருத்தறிந்த சூதமுனி "நான்குவேதங்களின்பொருள்களை அடக்கியது பாரதம்,, என்றார். அதனால் இங்கே பெறப்பட்ட துணிவு யாதெனில், ஆயுர்வேதம், தனுர்வேதமுதலியவிடங்களில் வேதமென்னும் பதத்திற்குப் பொருள் கொள்வதுபோல இவ்விடங்களிலும் பொருள்கொள்ளவேண்டுமாகையால், இது வேதமல்ல வேதம்போல ஆவசியகமான கடமைகளைக் காட்டும் நூலென்று ஏற்பட்டது. இனி, மூன்றாவதாகிய இதிகாசம் என்பது இதுவட்டுந்தானா, அன்றி வேறு இதிகாசங்களும உண்டா என்பதைப் பற்றி விசாரிப்போம்: இது இதிகாசமென்பதில் தடையில்லை. இதை இதிகாசமென்று பலவிடங்களில் "சிலர் படித்தார்கள். இப்பொழுது படிக்கின்றார்கள். இனியும் படிப்பார்கள். இந்த இதிகாசத்தை ப்பலரும் பரிசீலனை செய்வார்கள்,, என்றும், புண்ணியமான பாரத இதிகாச சரித்திரத்தைச் சொன்மின்,, "நன்னெறியும், தருமார்த்தகாமங்களும் மகா மேன்மைபொருந்திய இந்த இதிகாசத்திற் சொல்லப்பட்டிருக்கிறது,, என்றும், "இவ்வித அற்புத இதிகாசம் பாரதவமிசத்தார் பெருமையை விளக்குகின்றது,, என்றும் சொல்லப்பட்டிருக்கும் வசனங்களைக் காண்க. இதனால் இது இதிகாசமென்பது திண்ணம். வேறு இதிகாசங்களுமுள்ளவென்பது அப்பாரதத்தில் "இதிகாசங்களினுண்மையும் புராணங்களினுண்மையும் இதில் அடங்கியது,, என்றும், "இதிகாசங்களிற்சிறந்தது இது,, என்றும், பாரதம் என்னும் பெயர்வாய்ந்த இவ்விதிகாசம்,, என்றும் எழுந்த வசனங்களால் வெளியாகின்றது. அதுகொண்டே பெரியோர் ஞானவாசிட்டமுதலிய கிரந்தங்கள் இதிகாசங்களெனச் சொல்லுகிறார்கள். அங்ஙனம் பல இதிகாசங்களிருப்பினும், இப்பாரதசண்டத்திலுள்ள எல்லா மதஸ்தரும் ஆசாரியனென்று கொண்டாடத்தக்க மேன்மைபெற்ற நமது வேதவியாசாசாரியர் அருளிச்செய்ததாகையால் இதை யாவரும் கொண்டாடவேண்டியது அத்தியாவசியகமாம். இதிலே கீதைமுதலிய பல தத்துவங்கள் அடங்கியிருத்தலாலும், இவ்வளவு விஷயங்களுள்ள பெரிய இதிகாசம் வேறில்லாமையாலும் இதற்குப் பெருந்தன்மை வாய்ந்திருக்கின்றது. இதனை மூன்றுவருஷகாலத்திற்செய்து முடித்தனரென்பது "மூன்றுவருஷத்தில் இந்தக் கிரந்தத்தை வியாசர் செய்து முடித்தார்,, என்றும், "இவ்வற்புதமான இதிகாசத்தை மூன்று வருஷத்தில் வியாசர் செய்து முடித்தார்,, என்றும் பாரதம் ஆதிபருவத்திற் கூறுதலால் வெளியாகின்றது. இப்பாரதம் பதினெண்புராணங்களின்பின் பிறந்ததென்று ஒருவாறு சொன்னோம். அதுபற்றியே இப்பாரதத்தின் முடிவில் "பதினெண்புராண பாராயண பலன் இதின் பாராயணத்தால் உண்டாகும்,, என்றிருக்கின்றது. இதன் விஷயங்களைக்குறித்து வேதவியாசபகவான் ஒருவிதம் சொல்லி

[illegible]

யிருக்கிருர். அதாவது: ஆதிபருவத்திலே பிரமதேவனேடு செய்த சம்வாதத்தில் "இப்பாரதத்திலே வேதரகசியமும், உபநிடதக்களின் உண்மையும், இதிகாசபுராணங்களின் தாற்பரியமும், இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னும் முக்காலநிலைமைகளும்,, என்று தொடங்கி "நான்கு வருணங்களும், எல்லாப் புராணங்களின் உண்மைகளும், தவத்தின் நிலைமை, பிரமசரியத்தின் பெருமை, பூமி, சந்திரன், சூரியன் இவைகளின் உண்மை, கிரகங்கள், நக்ஷத்திரங்கள், தாரைகள் இவைகளின் பிரமாணம், யுகப்பிரமாணம், இருக்கு, யஜுர், சாமம் என்பவற்றின் உண்மை, நியாயம், சிக்ஷை, சிகிச்சை, பாசுபதஞானம்,, என்றும், "ஏதுக்களுடன் தேவமனிதஜன்மங்களும், சர்வபரிபூரணவஸ்து நிலைமையும் வெளியிட்டேன்" என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இங்கு கிரகம் என்பதால் சூரியன், சந்திரன், பூமி இவற்றையொழித்து, மற்றைப் புதன்முதலிய கிரகங்களைக் கொள்ளவேண்டியது. ஏனைய கிரகங்கள் நேரே சொல்லப்பட்டிருக்கின்றன. நக்ஷத்திரமென்றால் அச்சுவினிமுதலியன. தாரைகள் மற்றையவை என்று அருத்தங் கொள்ளல்வேண்டும். "பாசுபதஞானம்,, என்னும் பதத்தால் தற்காலத்திலே சிலர் மதத்துவேஷத்தால் உபமன்னியமகாமுனிவர் சரித்திரம் பாரதத்திலே சேர்க்கப்பட்டதெனச்சொல்லும் வாதம் நிலைபெறுதொழிந்தது. ஏனைய வேதசித்தாந்தங்கள் இதைமுதலிய கிரந்தங்களில் நன்ருய் விளக்கப்பட்டனவென்பதை அறியாதார் யாவர்? இவ்விடத்திலே பாரதத்தின் விஷய அட்டவணையில் பாஞ்சராத்திரத்தை வியாசபகவான் எடுத்துரைத்திலராயினும், மோக்ஷதருமத்தில் அதைப்பற்றிச் சில பாகம் சொல்லிப் புகழ்ந்திருக்கின்ருர். அதனுல், அதுவே அவருக்கு முக்கியமான கருத்தென்று சிலர் சொல்லுகிருர்கள். அதுமாத்திரம் ஆராயுமிடத்துச் சரியென்று எமது புத்திக்குத் தோன்றவில்லை. இது முக்கியமாயின், முதலில் இதைச் சொல்லியேயிருப்பார். அங்ஙனம் சொல்லாமையால், இவ்விடத்திலே சொல்லாதுவிடுத்த அனேக சரித்திரங்களைப்போல இதுவும் ஒரு அமுக்கியவிஷயமென்றே நடுவுநிலைமையாய்ப் பார்ப்பவர்களுக்கு நன்ருகத் தோன்றும். அங்ஙனமே பாசுபதமும் அவருக்கு முக்கியமோ, அன்ருே என ஆசங்கை நிகழின், 'பாசுபதஞானமும்' என்று அட்டவணையிற் சேர்த்தாராகையால், பாசுபததந்திரத்துள்ள ஞானபாகத்தின் சங்கதிகள்மட்டுமிதில் முக்கியமாகச் சொல்லியிருப்பதாய் ஒப்பவேண்டும். அதுகொண்டே பலவிடங்களில் பரமசிவமான்மியம அநேகமாய் வெளியிடப்பட்டிருக்கின்றது. மற்றைய பாதங்களிலுள்ள சரியை, கிரியை முதலியன அவ்விடம் காணப்படவில்லை. எந்தவிடத்திலும் வியாசாசாரியர் பாசுபதத்தை ஞானமெனவே குறிப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிருர். "இந்தப் பாசுபதஞானத்தை மயக்கமின்றிச் சிவபிரான் அருளிச்செய்தார்,,என்று மோக்ஷதருமத்தில் ஸ்ரீ பஞ்சமதசித்தாந்தாத்தியாயத்தில் வேதவியாசர் கூறினர். இங்ஙனம் பலவிடங்களிற் கூறியிருப்பதைப் பாரதத்திற் காண்க. இது இவ்விடத்தில் சங்கிரகமெனவறிக. இங்கு காட்டிய அட்டவணையிற்கண்ட விஷயங்களை முறையே காட்டுவோம். இது வேதமுமன்று; புராணமுமன்று; வேதத்தைப்போன்றதாம். மகரிஷியின் வாக்காதலால் இதனைப் புராணமென்று உபசாரமாய்ச் சொல்வது வழக்கம். மற்றைய இதிகாசங்கள் பலவிருப்பினும், இது பதினெண்புராண

[illegible]

श्रीविद्यारण्यमहामुनिचरितम्.

[अनुबन्धः.]

—:*:(*):*:—

[illegible]

சாரமாகையாலும், வேதவிபாசர் அருளிச்செய்ததாதலாலும், வெகுகாலங் ண்டதாதலாலும்] இது இத்தேசத்தவருக்கு ஓர் பெருநிதியென்றறிக.

இன்னும் வரும்.

மதமும், அதன் பிரயோசனமும், அதன் ஆசிரியரும்.

வித்தியாரண்ணியகுருவின் சரித்திரம்.

[முன் தொடர்பு]

ஸ்ரீ வித்தியாரண்ணியசுவாமிகளிபற்றிய கிரந்தங்கள் பல வற்றுள் முக்கியமானதும் முதன்மைபெற்றதும் வேதபாஷியமேயாம். அதிலே வேதங்கள் அநாதியென்பதற்கு நியாயமும், மந்திரங்களின் இலக்கணங்களும், இலக்கணங்களுக்கேற்ற பதப்பொருள்களும், அவைகளின் விநியோகமும், விதிவாக்கியங்களின் பெருமையும், அவற்றுள் முக்கியமாய்க்கொள்ளத்தக்கனவும், வேதாத்தியயனவிதியும், கிரமமாயறியவேண்டிய தத்துவபாகங்களும் வெளியிடப்படுகின்றன. அங்ஙனம் வைத்தியத்திலே நிதானசங்கிதையென்னுங் கிரந்தத்தில் ரோகங்களின் காரணங்களையும், அவற்றின் உட்பிரிவுகளையும் வெளியிடும். காலமாதவீயம் என்பது சகல கருமாநுஷ்டானங்களுக்கும் உபயோகமானகாலத்தை நன்றாய் விளக்கித் திதிமுதலியவற்றின் உண்மையைத் தெரிவிக்கும். பராசரஸ்மிருதிவியாக்கியானம் வருணாசிரமதருமங்களையும, சகல ஸ்மிருதிகாரரபிப்பிராயங்களையும நன்றாக வெளிப்படுத்தும். வியாகரணசாஸ்திரத்திலுள்ள தாதுவிருத்தியென்னும் நூலில், வியாகரணப்பியாசிகளுக்குயிர்போன்ற வினைச்சொற்களின் சொரூபம் விளக்கும். பூர்வமீமாஞ்சையென்னுங் கருமநூலில் அவரியற்றிய பாட்டசாரமென்பது தெள்ளிய நடையில் சிறு சுலோகங்களாக மீமாஞ்சையின் உட்கருத்துக்களை நன்றாக அறிவிக்கும். சூதசம்மிதாபாஷியம் ஸ்ரீ பரமசிவப்பெருமானது மகிமையை நன்றாக விளக்கி, ஆன்மாக்கள் பரகதிபெற்றுய்தற்குரிய வழிகளை எடுத்துக்காட்டும். அவ்வாறே சங்கரவிஜயமென்னுங் காவியத்தில் ஸ்ரீசங்கராசாரியசுவாமிகள் சரித்திரமும், அவர் ஸ்தாபித்த சித்தாந்தத்தின் பெருமையும் தெரியவரும். சந்நியாசம்பெற்றுக்கொண்டபின்பு எழுதிய கிரந்தங்களில் அதிகரணரத்தினமாலையென்பது ஸ்ரீவேதவியாசபகவான் திருவாய்மலர்ந்தருளிய பிரமசூத்திரத்திற்கு ஒத்ததாய், அதன் கருத்தை ஸ்ரீசங்கராசாரியசுவாமிகள் வெளியிட்டவழி எல்லோருமறியும்படி எளிய நடையில் எழுதப்பட்டது. அங்ஙனம் பஞ்சதசப்பிரகரணம் என்பதோ, அற்பஞானமுள்ளவரும் பார்த்துத் தெளியத் தக்க ஓர் மோக்ஷநூல். முப்பத்திரண்டுபநிடதங்களின் விருத்தியுரையென்பது வேதாந்திகளுக்கு ஓர் பெருஞ்செல்வம். சிவகீதையின் பாஷியத்தில் அனேகமான சிவதத்துவங்கள் வெளியிடப்பட்டன. இவ்வளவு கிரந்தங்களே பிரசித்திபெற்றவை. மற்றுஞ் சில ஸ்தோத்திரங்கள் இருக்கின்றன. அவைகள் கணக்கில் அடங்கினவையன்று. சில கிரந்தங்கள் இறந்துபோனதாகத் தெரியவருகின்றது. இப்பொழுது நமக்கு அகப்பட்ட கிரந்தங்களைக் கணக்கிடின், சுமார் ஒன்றரையிலக்ஷமாகும்.

இன்னும் வரும்.

𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌃.

𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌪𑍍𑌰𑍇𑌷𑌕𑌾𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌾𑌣𑌾𑌂 𑌪𑌤𑍍𑌰𑌾𑌧𑌿𑌪𑌾 𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑍁𑌵𑌃

𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑌃.

—:(*):—

𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌤𑌃! 𑌪𑌤𑍍𑌰𑌾𑌧𑌿𑌪𑌾𑌃!

[illegible]

கடிதங்கள்.

கடிதர்கள் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

ஓர் சந்தேகம்.

ஐய, பத்திராதிப!

யான் எழுதப்புகும் சில வரிகளைத் தயைகூர்ந்து நும் பத்திரிகையின் ஓர் கோணத்திலே பதித்து வெளிப்படுத்துவான் வேண்டுகின்றனன்.

என் உள்ளத்தே நெடுங்காலமாக ஓர் சமுசயம் உதித்து நிலைபெற்றிருக்கின்றது. அதற்குச் சரியான சமாதானம் இதுகாறும் எவரும் அளித்திலர். இப்பத்திரிகையில் எழுதிவரும் நிருபேசர்கள் கல்விகேள்விகளிற் சிறந்தவராதலால், அவர்கள் இப்பத்திரிகையின் வாயிலாக எனக்குச் சமாதானமுரைத்து என் சந்தேகத்தை நிவிர்த்திசெய்வார்களென்று எண்ணி, இப்பத்திரிகையின் முதற்புத்தகம் முதற்சஞ்சிகையிற்றானே அச்சமுசயத்தை வெளியிட்டு அதற்குச் சமாதானம் வருமென்று இதுகாறும் எதிர்பார்த்துக்கொண்டு ஓர் மூலையில் மௌனமுற்றிருந்தேன். ஒவ்வொரு பத்திரிகையையும் தவிராது பார்த்தும் எனக்குச் சமாதானமளிப்பார் ஒருவரையுங் காணேன். எனது கேள்வியும் நெடுநாட்கழிந்தபடியால் இப்பொழுது பண்டிதர்கள் மனத்திலே படாதொழியினும் ஒழியும். ஆதலால், அதனைச் சுருக்கி மீட்டும் சொல்வேன். ஸ்ரீ நாராயணனுடைய திருவடிகளைச் சரணமாய் நம்பியவருள் அவரவர் வெவ்வேறு அடையாளங்களையும், வெவ்வேறு ஆசாரங்களையும் அனுஷ்டிக்கும்படி ஏற்பட்டதற்குக் காரணம் யாது என்பதே எனது கேள்வியாம். இதன் விரிவு வேண்டுமாயின், முதற்புத்தகம் முதற்சஞ்சிகையிலே காண்க. இங்ஙனம் நான் கேட்ட கேள்விக்குச் சமாதானங்கூறாமலே நடுவில் ஓர் வைணவனென்னும் ஒருவர் ஸ்ரீமந்நாராயணனுக்குத் திருநீறுதரித்தலே உரியதென நிலைநாட்டுபவர்போல வெளிவந்தார். அவரது கொள்கையைச் சித்தாந்தியென்னும் ஒருவர் தழுவினர். இவர்கள் கொண்ட தாற்பரியத்தைக் கண்டித்தலே எமக்கு உசிதமென்றுன்னி, ஓர் வைகானஸமணியும், வஞ்சி வைஷ்ணவரும் முன்னின்றார்கள். இஃதிங்ஙனமிருக்க, வைதிகசித்தாந்தரத்தினவளியென்னும் மகுடத்தின்கீழ் சிலவரிகளையெழுதி, தாம் நடுவுநிலைமையுடையாரென்றும், பண்டிதரென்றும் தாமே தம்மைக் கண்டு களித்து, எமது கேள்விக்கு உத்தரமளிக்காது உலகத்திலே பரமசிவப்பெருமானை வழிபடும் பலரும் அனுஷ்டித்து வரும் திருநீறணிதலை அவைதிகமென்று தாம் தாபித்ததாய்த் தம்முள் தாமே களிகூர்ந்தார். இவ்வித மகாகோலாகலத்தில் நாம் இடைவிழுந்து ஒரு சங்கதியைக் கேட்டல் உசிதமன்றென்றெண்ணி, அவர்கள் ஒருவருக்கொருவர் எழுதிக்கொள்ளும்வழியில் எமது கேள்விகளுக்குச் சமாதானங் கிடைக்குமோவென்று இதுகாறும் எதிர்நோக்கியும், ஒரு வித்துவானுவது எனது சங்கையை ஒழித்திலர். ஆதலால், இவர்கள் யாவரும் ஒருங்குசேர்ந்து எனது சங்கையை ஒழிக்கும்படி மிக வணக்கமாய்க் கேட்கின்றேன். எனக்கு விதண்டாவாதத்தில் இஷ்டமில்லை. ஆனை

[illegible]

யால், ஏதேனும் இவனுக்கு உத்தரஞ்சொல்லவேண்டுமென்று வித்துவான்கள் ஆக்கிரகங்கொள்ளவேண்டிய ஆவசியகமில்லை. எங்ஙனமெனில், "வேதங்களிலே வெண்ணிறத் திருமண்ணினால் ஊர்த்துவபுண்டரந் தரித்தல் சொல்லப்பட்டிருக்கின்றதா" என்று ஓர் கேழ்வி தோன்ற, அதற்கு "ஊர்த்துவபுண்டரந் தரித்து" என்று தொடங்கிய சில வசனங்களால் சாமானியமாய் ஊர்த்துவபுண்டரத்தைத் தரித்தல் வேதத்திற்சொல்லியதேயென வைகாநசமணி சமாதானமளித்தாராயினும், அது தெளிவாய் வெண்ணிறமுற்ற மண்ணினாலென்று வெளியாகவில்லையாதலால், அதை நேரிலெடுத்துக்காட்டும் வைகாநச தந்திரத்தையும் வைதிகமெனஸ்தாபிக்க விருப்பங்கொண்டார். இதுநிற்க; இவ்விடம் எழுந்த வினாவிற்கு இது சமாதானமாக வைணவரும், சித்தாந்தியும் ஒப்பக்கொள்ளமாட்டாரென்பதிற் றடையில்லை. ஏனெனில், அவர்கள் வெண்ணிறமுற்ற திருமண்ணைத் தரிக்க வேதத்திலாதாரமுண்டோவென வினவ, அவ்வித ஆதாரத்தைக் காட்டாமல் ஏதேதோவெழுதினால், அது இதற்கு விடையாமா? இதுவும் நிற்க; பெருமைபொருந்திய வஞ்சி வைஷ்ணவரென்பவர் இதற்குத் தெளிவான ஆதாரமாக வராக உபநிஷத்து என்னும் உபநிடதத்தை எடுத்துக்காட்டி, அது பிரமாணமென்கிறவிஷயத்தில் பத்திராதிபரையே சாக்ஷியிட்டார். அதுவும் சரியென்று என் சிற்றறிவுக்குப் புலப்படவில்லை. பத்திராதிபர் நூற்றெட்டு உபநிடதங்களின் விஷயங்களைக் குறிக்குமிடத்தில் வராக உபநிடதமென்றும் ஓர் உபநிடதமுண்டென்று எழுதினரேயொழிய, அது இரண்டுவிதமென்று காட்டினரில்லை. இவ்வுபநிடதம் பிரமாணமென்னும் விஷயம் வைணவர்களெல்லோருமே ஒன்றுபட்டு ஒப்பியதல்லவே! ஏனெனில், சமீபகாலத்தில் வைணவர்களுக்குள் நடந்த ஓர் உள்ச்சண்டையில், ஸ்ரீவேதாந்ததேசிகர் அருளிய சித்தாந்தத்தைச்சார்ந்த வடகலையாரென்பவர் தாம்கொண்ட ஆசாரத்திற்குப் பிரமாணமாக இவ்வராக உபநிடதத்தை யெடுத்துக்காட்ட, அதைப் பொய்யென்று மறுத்துத் தென்னாசாரிய சம்பிரதாயஸ்தரான வழங்கும் தென்கலையார் "நின்ற விஷ்ணுவின் இருகால்களுள்வடிவமாய்" என்று தொடங்கிய சில வசனங்களை யெடுத்து உதகரித்துநின்றார்கள். உடனே அங்கிருந்த ஓர் வடகலைவைஷ்ணவர் எழுந்து ஜனங்களை நோக்கி, ஐயா! இந்த வேதம் உண்மையே. இதை நான் படித்ததுண்டு. இதற்குமேல்வசனமெனக்குத்தெரியும். "இவ்வித புண்டரத்தைத் தரித்தவன் பிர்மஹத்தி பிடித்தவன்" என்பதாகியாய் வெளிவந்த சில வசனங்களை, ஸ்ரீகாஞ்சிமாநகரில் வாழும் சம்பிரதாயவைணவர்களுள் ஒருவரெழுதிய "தென்னாசாரிய பிரபாவகண்டனம்" மென்னும் புஸ்தகத்திற் கண்ணுற்றேம். மேலும், இக்காலத்து வைணவர்களுட் பலர் ஆசௌசகாலங்களில் ஸ்ரீசூர்ணமிடுவதில்லையே. அது வேதத்திற் சொல்லப்பட்டதானால் அதை அக்காலத்தில் விடக்கூடுமா? இஃது இங்ஙனமிருக்க; மற்றொரு ஆச்சரியம் வெளிப்பட்டது. அஃதியாதெனில், வைதிகசித்தாந்தத்தினுவளிக்காரர் சந்நியாச உபநிடதத்தில் "குடீசகன் வெண்ணிறம்பூண்ட திருமண்ணினால் ஊர்த்துவபுண்டரம் தரித்தவன்" என்று இருத்தலால் அது அவ்வளவுகொண்டே வைதிகமாகுமென்று எண்ணி அவ்விதம் வெளியிட்டு, அனேகம் உபநிடதங்களில் முக்கியமாய் ஒருவிதமாய் வெளிப்படையாய்க் கூறப்பட்டுள்ள திருநீறுதரித்தலை,

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

சாம்பவம் பாசுபதம் முதலிய சிலபதங்கள் அவ்வுபநிடதங்களிலிருத்தலால் அது தாந்திரிகமென ஸ்தாபித்து, இதுகொண்டு உலகமெல்லாம் ஜயித்ததாயெண்ணி உளமகிழ்ந்தாரென்பதே! இதுவிஷயத்தில் எமக்கேதும் ஆக்கிரகமில்லை. ஆயினும், நமது நண்பரை நாம் கேட்கவேண்டியதொன்றுண்டு. அதாவது, இவர் வைதிகமெனக்கொண்டதெது? அவைதிகமெனக்கொண்டதெது? வேதத்திற் சொல்லப்பட்டதுமாத்திரம் வைதிகமென்பராயின்; சந்தியாவந்தனமுதலிய நித்தியகருமங்கள் வேதங்களிலும், தருமசாஸ்திரங்களிலும், தந்திரங்களிலும் சொல்லப்பட்டிருப்பதால், அவை வைதிகங்களாவதெப்படி? வேதங்களில் இது வைதிகர்களுக்குரியதென்று சொல்லப்பட்டதே வைதிகமென்னில், அக்கினிஷ்டோம முதலிய யாகங்கள் இவர் கூறும் வழியில் வைதிகங்களா? அன்றி, வேறு? ஓர் தேவதையின் பிரீதியைப் பயனாகக் குறிக்காது வேதத்தில் வெளிப்பட்ட வசனங்களே வைதிகங்களென்னில், இவர் கொண்டது பயன்படாது. ஆக்கினேயம், வைஷ்ணவமுதலிய பெயர்களால் அவ்வத்தேவதைகளை உத்தேசித்து அவைகளுக்குத் திருப்தியுண்டாகும்படி செய்மத்தக்கதாய்ச் சொல்லப்பட்ட கர்மங்களும் அவைதிகங்களாயொழியும். பின் எமக்கு எது இஷ்டமோ அது வைதிகம்; மற்றவை அவைதிகமென்று இவர் இலக்கணங்கட்டிக்கொள்வராயின், இதிற் சிறிதும் விவாதமில்லை. இவ்வித இலக்கணமே இவர் இஷ்டப்படி திருமண் தரித்தலை வைதிகமென ஸ்தாபிக்கும். இனி, வேதங்களிற் சொல்லப்பட்டதே வைதிகமெனக் கொள்வராயின், திருநீறுதரித்தல் வைதிகமாகாமற்போவதெப்படி? ஆதலால், எல்லோரும் கண்டு களிப்பெய்த எனமீது கருணைகூர்ந்து ஸ்ரீ வைகாநஸமணி, வஞ்சி வைஷ்ணவர், நடுவுநிலைமைநாடும் நாவலர் ஆகிய மூவரும் ப்ரம்மவித்தியாபத்திரிகை வாயிலாகக் காரணமற்ற மதாபிமானத்தையொழித்து, எனக்கு உத்தரமளிப்பார்களென எதிர்பார்க்கின்றேன். இஃதன்றியும், சொற்பகாலத்தின்முன் தத்துவவிவேசினியென்னும் பத்திரிகையில் இந்துதத்துவப்பிரபாவம் என்னும் தலைப்பின்கீழ் எழுதப்பட்ட சில சங்கதிகளுக்குக் கலியுகவித்தையென்னும் மகுடத்தினையுடைய சில வரிகளால் யான் வெளியிட்ட மறுப்பு இதுவரையில் அப்பத்திராதிபரால் ஆக்ஷேபிக்கப்படாதபடியால், அதைக்குறித்து வித்துவான்கள் தமது தாற்பரியத்தை வெளியிடுவார்களாக. இங்ஙனம், அறிஞர்கள்முன் அறிக்கையிடும்

ஓர் தமிழன்.

கிறிஸ்தவர் ஸ்கூலில் பெண்களை அனுப்பக்கூடாதென்பது.

இந்துமதாபிமானிகளே! நமது பெண்களைப் பாதிரிகள்ஸ்கூல்களில் அனுப்புவதால் நேரிடும் அனர்த்தங்களையுணர்ந்தும் மறுபடியும் விடுவது தருமமாகுமா? கல்வியில்லாமற்போனாலும் போகலாமேயொழிய அவர்கள் ஸ்கூல்களில்மாத்திரம் அனுப்புவது கூடாது. நம்மவரே ஸ்கூல்கள் ஏற்படுத்தலாம். கவர்ன்மெண்டார் சகாயமும் செய்கின்றார்கள். பிரபுக்களும் மடத்தாரும் ஒத்தாசைசெய்வார்கள். அப்படிக்கில்லாவிடில் "பாதிரிகள் ஸ்கூல்களில் விடுவதில் எங்கள் ஆசாரம் கெடுகின்றமையால் அவர்கள் ஸ்கூல்களில் விடுவதை நிறுத்திவிட்டோம். இனி நீங்களே ஸ்கூல்களேற்படுத்தித்தரவேண்டும்" என்று கேட்டுக்கொண்டால் அவர்கள் அப்படியே வைத்துத்தருவார்கள். இதைவிட்டு நமது அரிய பெண்மக்களைப் பாதிரிகள்வாய்க்கு இலக்காக்குவது தருமமல்ல.

நன்மைநாடுவோன்.

Printed and Publishd for she Proprietor at tha
BRAHMAVIDYA PRESS, CHIDAMBARAM.

ப்ரம்மவித்தியா

அனுபந்தம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

—:*:(*):*:—

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

சடித உத்தரம்.

மதாபிமானசபை, டஞ்சபனா ஆசரித்தல், தைத்தொலைத்தல், ஆரியமதபரூபாணி எழுதிய பத்திரிகை என்னும் இவை வெருமுனறவரும்.

சூசனம்.

☞ சென்ற சஞ்சிகை சுசு-வது டச்சம் ச[illegible]ல் "நம் தேசத்தில் சோரர்கள் திரீகள் தொகை அதி[illegible]த்தேசத்தில் மற்றவர் குற்றமாய்ச்சொல்லும் பா[illegible]பென்றே நம்பவேண்டியது" என்பதை "இப்ப[illegible]ல் அவ்வித விசனம் இல்லாதிருப்பதும் நம் தேசத்[illegible]டித்துவரும் பாலியவிவாகத்தின் உத்தமமான ப[illegible]டையின்றி ஒப்புக்கொள்ளவேண்டியது" என மா[illegible]

உ

ஸ்ரீரஸ்து.

கின் மன்னுயிர்க் கிரங்கி
தாழிலு கிறுவுதன் னருளால்
_க்க ணுண்மலர்க் கொன்றையொடு
ந்த தனிமுதற் கடவுள்
வே திரண்டொரு மானிட
தசென் றுலகெலாம் புகழும்
த அருமறைக் கிழவோன்
பில் உலகுசெய் தவத்தால்
றறு லாறுபாய்த் தோங்கிச்
ாருளுந் தீரமு மாழ்ந்து
ருமையும பேசுதற் கரிதாய்ப்
மதி பண்புறத் தோன்றக்
ளிக்குங் காகூதியு மகலா
புகழும் வளம்பெறு மிராஜ
லுயோர் தெண்டிரைக் கடலிடைத்
ண்மைச் சிவபரம் பொருளின்
முதம் தெவிட்டற வுண்டு
ம வித்தியா பத்திரிகை
ர் மழைபினை எங்கணு முயிர்ப்பயிர்
கூர்தரச் சென்றுள முவந்து
ாரப் பொழியும்
செழுமுகில் கேண்மோ.

சன்றமாதத்திய பத்திரிகையில் எழுதியிருந்த
ஓர் நண்பர் சில வரிகளை யெழுதி 'உங்களையும்
அழைக்கிறேன்' என்றுர். இதனல் எனக்குண்
ம் கொஞ்சமல்ல. சந்துபொந்துகளில் முக்கா
டு மூடர்களிடம் மாத்திரம் ஒரு வார்த்தைபேசி
க அழைப்பதைக்காட்டிலும், இவ்வாறு தங்கள்
ற பத்திரிகைவாயிலாய் இவர் வெளிவந்ததைப்
மிகச் சந்தோஷமே. ஆனல், அவர் எண்ணம்
ற விவேகிகளாகிய ஓர் பத்திராதிபர் தயவினல்
மச் செலவோடு எல்லாரையும் கிறிஸ்தவராக்கி
துபோலும். இது விந்தையே!! இதுநிற்க;
கிறிஸ்துமதத்தை ஓர் மதமாக நினைத்து அதைக்
குவது நமக்கு ஏற்காதாயினும், இப்போது தேச
ாய்விடுமாதலாலும், இன்னும் அநேக விபரீதங்கள்
லும், ஒருவாறு நண்பர் சொல்லிய பைபில் என்
ம, உலகத்தில் எல்லாத் தீமைக்குங் காரணமென்
ருந்துதான் எல்லா அனர்த்தங்களும் விளைந்ததென்
ழைய ஏற்பாடுகளினுள் உள்ள அநேக ஆபாசங்க
சிறிதாய்த் தங்கள் பத்திரிகையின் மூலமாய் எடுத்
துணிகிறேன்.

னல், எனது சகோதரர்கள் ஒன்று கவனிக்கவேண்
ற பலநாளும் பாதிரிமார் நேசன். இந்நகரில் பாதி
பிரசங்கம் அதிகம். அத்துடன் போதகர், பாத
கர் முதலிய சிலரும், ஒத்துப்பாடி ஒப்பாரிவைக்கப்
கிறேன். யான் காலைமாலையில் ஊருக்கு வெளியே
ற வழக்கமுண்டு. அங்கே ரஸ்தாக்களில் சில பாதி
களை வஞ்சிக்கும்பொருட்டு "ஒருசீட்டு வெற்றுச்
சீட்டுப் பொம்மைச்சீட்டு, போனல் ஒருரூபாய் வந்
ரூபாய்" என்றும் சொல்லி, பட்டிக்காட்டுஜனங்
அவர்களைப் பணம் வைக்கச்சொல்லியும அடித்துப்
ள்ளுகிறதைப் பார்த்திருக்கிறோம். அங்கே விவே
தாமொருவன் சற்று நின்றுல், "ஐயா! நீங்கள் வழி
போங்கள்; ஏதோ நாங்கள் பிழைப்புக்கு நடத்துகி
றோம்; நீங்கள் போங்கள்" என்று பயந்து கெஞ்சிக்கேட்கிற வழக்கமுண்டு. அவர்கள் சூதை வெளிப்படுத்துவதினல் நமக்கென்ன; தங்கள் பாவச்செய்கையை உணர்ந்தும் வஞ்சிக்கின்றுர்களே என்று நாம் மன்னித்துப்போவதுண்டு. அதுபோலவே முன் சொல்லிய பாதகர்கள், பாதிரிமார்களை உள்ளே நாற்சாவியில் பொம்மைபோல இருக்கச்செய்து இவர்கள் வெளியில்நின்று அழுகிற வழக்கமுண்டு. யாதாமொரு சொற்ப அறிவுள்ள ஒருவன் அங்கே நின்றுல் "ஐயா, நீங்கள் வழியோடு போகலாம்; யேதோ நாங்கள் பிழைப்புக்கு நடத்துகிறோம்" என்று கெஞ்சிக் கேட்கிறுர்கள்.

இன்னும்வரும்.

ஓர் இந்துசமயநேசன்.

சுடந்தைமித்திரன்,—இப்பெயர்வாய்ந்த பத்திரிகை ஒன்று கும்பகோணத்திலே தோன்றி வெளிப்பட்டுவருகின்றது. உலக க்ஷேமவிருத்தியையே பெரிதும் நாடி, இராஜாங்கவிஷயங்களையும் குடிகளின் குறைகளையும நன்றுய் எடுத்துப்பேசிவரும் இப்பத்திரிகை என்றும் நிலைபெற்றிருக்கும்படி கடவுள் அருள்புரிவாராக. இதன் ஆரம்பமுதல் முறையே எமக்கு அனுப்பிவரும் அப்பத்திராதிபர்க்கு மிக்க வந்தனம் சொல்கின்றோம். இதின் கையொப்பக்கிரயம் வருஷம் I-க்கு ரூபா 3—0—0.

—:O:—

அமிர்தபோதனி,—இது சேலஞ்சில்லா திருப்பத்தூரிலே தோன்றி, இனிய நடையால் அரிய விஷயங்களைத் தெளியப்பேசி யாவர் மனத்தையும் களிகூரச்செய்து உலவுகின்றது. இதிலே சைவசமயிகளுக்குரிய அநேக விஷயங்கள் நன்றுகப் பேசப்படுகின்றன. கிறிஸ்துமத ஆபாசங்களும் வெளிப்படுத்தப்படுகின்றன. இப்பத்திரம் என்றும் நிலைபெற்றுவாழ ஈசன் அருள்புரிவாராக. இதனை எமக்கு அனுப்பிய பத்திராதிபர்க்கு அநேக வந்தனம். இதன்கையொப்பக்கிரயம் வெளியூராருக்கு வருஷம் I-க்கு ரூபா 3—8—0.

—:O:—

விவேகசுந்தரம்-—இந்நங்கை முன்னிலும் மிக்க நன்னெறிசாற்றி இந்நிலமுழுதும் பெருநலமெய்த மூன்றுமுறையும் தோன்றுவாளாயினள். இவள் முன்னிருமுறையும் பெற்ற கீர்த்திக்கு ஓர் அளவில. இதன் விலையும் பை மூன்றே.

இஃதன்றி "நன்மைநலந்தரும்" "சத்துருசகவாசம் நித்திய சங்கடம்" என்னும் நீதிமொழிகளை அவைகட்கேற்ற இனிய கதைகளால் விளக்கிக்காட்டிச் சிறுவர்க்கும் இனிது புகட்டும் இரண்டு சிறு புத்தகங்களும் வெளிப்பட்டிருக்கின்றன.

இவைகளின் விலை புத்தகம் I-க்கு பை ஒன்றே.

—:O:—

ஓர் ஆச்சரியம்.

இரம்பூரிலே ஒரு மகமதியப்பெண் இறந்தபோது அவளைப் பிரேதப்பெட்டியிலடக்கிப் பிரேதபூமிக்குக் கொண்டுபோனர்களாம். அங்கே அப்பெட்டி அசைவு கண்டு திறக்கப்பட்டபோது அவள் உயிர்த்தெழுந்துவிட்டாளாம். மீண்டும் ஆறுநாள் உயிரோடிருந்து பின் மாண்டனளாம். தேவகுமாரராகிய கிறிஸ்துநாதரைப்போல் இவளும் இறந்தபின் உயிர்பெற்றெழுந்தமையால் அவர்போன்ற ஓர் தேவகுமாரிதானே! மத்தேயுவாதியோர்போல இவட்குஞ்சிலர் இல்லாமையாலன்றோ இவள் அவர்போலாகாதொழிந்தாள். கிறிஸ்தவர் இதனை அறிந்திலரோ!

விபுகிதை.

இப்புத்தகம் சென்னை பெத்து நாயக்கன்பேட்டை ஏகவல்லியம்மன் வீதி, மேலண்டைவாடை 6. நெ- வீட்டில் அத்வைத விவேக சமாஜத்திலொருவரான தி. ரே. திருவேங்கடபிள்ளை யவர்களிடம் ரூபா 2௳ விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.